1994 மே 4]

நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக அரசு ஆணை எண் 302 நாள் 13—12—1993 இல் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ரூபாய் 67 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். இதில், நகராட்சிக்குச் சொந்தமான திரு. வி. க. சந்தையில் மட்டும் கடைகள் கட்டுவதற்காக 20 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்த திரு. வி.க. சந்தையில் கடைகள் கட்டுவதற்குத் தொழில் நுட்ப அனுமதிக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இன்றைக்குக் காத்து இருக்கிறது. அந்தத் தொழில் நுட்ப அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் இன்றைக்கு டெண்டர்கள் கோரப்பட்டு பணிகள் விரைவிலே தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* இடப்பெறறிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) கன்னியாகுமரி மாவட்டம், முக்கூடல் அணையிலிருந்து நாகர்கோயில் நகராட்சிப் பகுதிகளுக்கு எட்டு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விடுவதால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. இரா. அப்பு நடேசன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருவார். திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம் முக்கூடல் அணையிலிருந்து நாகர்கோயில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் எட்டு நாட்களுக்கு ஒரு முறை விடப்படுவது'' குறித்த அவசரப் பொது முக்கித்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 மே 4

அறிக்கை.

நாகர்கோயில் நகராட்சி பகுதிகளுக்கு நகரிலிருந்து 13 கி.மீ. தொலைவிலுள்ள நகராட்சிக்குச் சொந்தமான முக்கூடல் அணையிலிருந்து குடிநீர் இரு குழாய்கள் மூலம் எடுத்து வரப்பட்டு (By gravit tion) நகரிலுள்ள பில்டர் கவுஸ்க்கு கொண்டு வந்து பின்பு நகரின் எல்லா பகுதிகளுக்கும் விநியோகம் செய்யப்படுகிறது. தினசரி 140 லட்சம் லிட்டர் வழங்கப்படுகிறது. நகராட்சி பகுதியினை மூன்று பகுதிகளாகப் பிரித்து (3 Zones) குடிநீர் வழங்கப்படுகிறது. (1) தாழ்வான பகுதி, (2) மேடான பகுதி I, (3) மேடான பகுதி II என்பன அவை. தாழ்வான பகுதிக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாளும், மேடான பகுதி II-க்கு இரண்டு நாட்களுக்கு ஒரு முறையும், மேடான பகுதி I-க்கு மூன்று நாட்களுக்கு ஒரு முறையும், குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த மாதம் முக்கூடல் அணையிலிருந்து தண்ணீர் வரும் புது மெயினில் 10 இடங்களில் நீர்க்கசிவு ஏற்பட்டதால் அவைகளை சரி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு பொது மக்களுக்கு பத்திரிகை மூலம் தகவல் தெரிவித்து 25—2—1994-ம் தேதி முதல் 15—3—1994-ம் தேதிக்குள் செய்து முடிக்கப்பட்டது. அதுசமயம் குடிநீர் வழங்குவதில் சற்று தாமதம் ஏற்பட்டது. பொது மக்களுக்கு குடிநீர் சப்ளை முழுவதும் பாதிக்கப்படவில்லை. இந்த கசிவுகள் அடைக்கும் வேலை நடைபெறும்போது, தாழ்வான பகுதியில் 2 நாட்களுக்கு ஒருமுறையும், மேடான பகுதி II-க்கு 4 நாட்களுக்கு ஒருமுறையும் மேடான பகுதி I-ல் 5 முதல் 6 நாட்களுக்கு ஒருமுறையும் குடிநீர், வழங்கப்பட்டது. மேற்படி கசிவு அடைக்கும் வேலைகள் நடைபெறும்போது மின் விநியோகத் தடையினாலும் குடிநீர் விநியோகம் தடைப்பட்டது. இச்சமயத்தில் இந்நகரிலுள்ள மொத்தப் பகுதியில் 10 சதவிகிதம் பகுதி மட்டுமே அவ்வாறு பாதிப்புக்குள்ளானது. ஏனைய பகுதிகளில் இப்பாதிப்பு இல்லை.

தற்சமயம் குடிநீர் விநியோகம் தாழ்வான பகுதிகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் மூன்று மணி முதல் பதினெட்டு மணி நேரமும், மேடான பகுதி II-க்கு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை, நான்கு மணி முதல் ஆறு மணி நேரமும், மேடான பகுதி I-க்கு மூன்று நாட்களுக்கு ஒரு முறை, மூன்று மணி முதல் 12 மணி நேரம் வரையிலும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். நாகர்கோயிலிலிருந்து 13 கிலோ மீட்டர் தூரத்திலே முக்கூடல் அணை இருப்பதாகவும் அங்கிருந்து வருகின்ற மெயின் குழாயிலே பத்து இடங்களில் கசிவு ஏற்பட்டதாகவும், அந்தக் கசிவின் காரணமாக ஒருசில மாதங்களுக்குச் சிலயிடங்களிலே இரண்டு நாட்களுக்கு

1994 மே 4] [திரு. இரா. அப்பு நடேசன்]

ஒரு தடவை, மேடான பகுதிகளிலே 4 நாட்களுக்கு ஒரு தடவை, அதிலும் மேடான பகுதிகளிலே 6 நாட்களுக்கு ஒரு தடவை விட வேண்டியிருந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

உண்மையிலேயே ஒரு வருஷமாக அங்கு அப்படித்தான் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். திடீரென்று பத்து இடங்களிலே கசிவு ஏற்பட்டது என்றால், அது எப்படி உண்மையாக இருக்கும்?

நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரமாக இருக்கின்றது. தலைநகரமான அந்த நாகர்கோவிலுக்குக் குடிநீர்த் திட்டம் சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்னாள் மகாராஜா காலத்திலே தோன்றியது, உற்பத்தி பண்ணியது. அன்று இருபதாயிரம் ஜனத்தொகைதான் அங்கே இருந்தது. இன்று இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஜனத்தொகை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், நாகர்கோவிலிலிருந்து கன்னியாகுமரி வரையிலும், இன்று அந்தத் திட்டத்தை வைத்துத்தான் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

வருஷம் இரண்டு முறையும் மழை பெய்கின்ற மாவட்டம் எங்களுடைய மாவட்டம். அங்கேயே 6 நாட்களுக்கு ஒரு தடவை தண்ணீர் என்றால், மிகவும் சிரமமாக இருக்கிறது.

இன்று குடிதண்ணீருக்காக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எங்கு வேண்டுமானாலும், எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் செலவு செய்து, ஏழை எளிய மக்களுக்காகக் குடிதண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தவேளையிலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே அவர்கள் ஆறு நாளைக்கு ஒரு தடவை என்று கொடுத்தது—இப்பொழுது இன்றைக்குக் கவன ஈர்ப்பு போட்ட உடனேயே, அதைச் சீரமைத்து இரண்டு நாட்களுக்கு என்று கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், மேலும் தினமும் கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் வேண்டிய ஏற்பாடுகளைப் பண்ணுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாகர்கோவில் நகராட்சியைப் பொறுத்தவரை அந்தப் பகுதி ஒரு தாழ்வான பகுதி அல்ல. அந்த நகரத்தை ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால் அது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தாழ்வான பகுதி, மேடான பகுதி, மிகவும் மேடான பகுதி என்று மூன்று 'ஸோன்'களாகப் பிரிக்கப்பட்டு, அந்த அளவிலேஇன்றைக்குக் குடிநீர் அந்த நகர மக்களுக்காக வழங்கப்பட்டு வருகிறது.

[திரு டி. எம். செல்வகணபதி] [1994 மே 4

மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்றபொழுது ஒரே சமயத்திலே பத்து இடங்களிலே எப்படி நீர்க் கசிவு குழாய் களிலே ஏற்படும் என்று கேட்பார்கள்.

உண்மையிலேயே இந்தக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்த வரையில், சுதந்திரத்திற்கு முன்பாக, 1943-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டம். அன்றைக்கு இந்தத் திட்டம் வகுக் படுகின்ற சமயத்திலே சுமார் இருபதாயிரம் மக்கள் தொகைதான் அங்கு இருந்தது. அந்த அடிப்படையிலே, இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சென்று விட்டபடியால், அந்தக் குழாய் கள் பழுதடைந்திருந்த நிலையின் காரணமாக அப் படிப்பட்ட கசிவுகள் உருவாகியிருந்தன. அப்படி அந்தக் கசிவு கள்ஏற்படுகின்ற சமயத்திலே நாகர்கோவில் நகரத்திலே குடிநீர்த் தட்டுப்பாடு இருந்தது.

முற்பகல் 11-10

மூன்று நாட்களுக்கு ஒருமுறை, 5 நாட்களுக்கு ஒருமுறை என்று நிச்சயமற்ற தன்மையில் இருந்து வந்தது. ஆனால், இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, அந்தக் கசிவுகள் எல்லாம், போர்க்கால அடிப்படையிலே, சரி செய்யப் பட்டு ஒழுங்காக இன்றைக்கு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு, நாகர்கோவில் நகராட்சிக்கு என்று குடிநீர் வழங்கு வது என்பது, முக்கூடல், அணையிலிருந்துதான் குடிநீர் எடுக்கப் பட்டு வருகிறது. தற்போது முக்கூடல் அணையில் இருக்கிற நீரின் அளவைப் பார்க்கிறபோது, அந்த நீரின் அளவை வைத்து, எந்த அளவுக்கு நாம் முறையாக, பாதுகாப்பாக அந்தக் குடிநீரை வழங்குகிறோமோ, அந்த அளவுக்குத்தான் வருகிற கோடைக் காலத்திலே அந்தக் குடிநீரை முழுமையாக வழங்க முடியும். இல்லையென்று சொன்னால், தினந்தோறும் இன்றைக்கு வழங்கி விட்டோம் என்று சொன்னால் கோடைக் காலத்திலே மிகுந்தக் குடிநீர்ப் பஞ்சம் ஏற்படுகிற நிலைமை உருவாகும் என்ற கார ணத்தினால், அங்கே இருக்கிற முக்கூடல் அணையிலே இருக்கிற குடிநீரின் அளவைக் கருத்திலே கொண்டு, இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். தற்போது எந்தவித பிரச்சினையும் இன்றி, தாழ்வான பகுதிகளுக்கு தினமும், மேடான பகுதி I-க்கு இரண்டு நாட்களுக்கு ஒரு முறையும், மேடான பகுதி II-க்கு, 3 நாட்களுக்கு ஒரு முறையும், சுமார் 6 மணி நேரம், 8 மணி நேரம் வரையிலே அங்கே 'பம்பிங்' நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்தகைய நிலையைப் போக்குகிற வகையிலேதான், இப்போதுள்ள பழமை யான குடிநீர்த் திட்டம் மாற்றியமைக்கப்படவேண்டும்; ஒரு நிரந்தரத் தீர்வு, நாகர்கோவில் நகராட்சி மக்களுக்கு உருவாக வேண்டுமென்ற காரணத்தினால், இதயதெய்வம் தமிழகத்தி னுடைய ஒப்பற்ற முதலமைச்சர், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், இன்றைக்குப் பேச்சிப்பாறை முதல் அனந்தனார் பொதுப்பணித் துறை வாய்க்கால் மூலமாக, ஒரு திட்டத்தை, நாகர் கோயில் நகராட்சிக்காக உருவாக்க வேண்டுமென்று ஆணைகள்

வழங்கி இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, அந்தத் திட்டம் சுமார் ரூ. 14 கோடியே 72 இலட்சம் மதிப்பீட்டிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கிற நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு, நாகர்கோயிலினுடைய குடிநீர்ப் பிரச்சினையையும் கருத்தில் கொண்டு, எந்த அளவுக்கு அந்தப் பணிகளை ஆரம்பிக்க முடியும் என்பதை ஆய்வு செய்து, உடனடியாக நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பேச்சிப்பாறை டேமிலிருந்து குடிநீர் எடுப்பதற்கு, நிரந்தரமான ஒரு திட்டத்தை மேற்கொள்ள, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருப்பதாகவும், அந்த வேலைகள் நடந்து கொண்டிருப்பதாகவும் சொன்னார்கள். மிக்க நன்றி. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்திலே, என்னுடைய தொகுதியில்தான் இந்தப் பேச்சிப்பாறை பெருஞ்சாணி போன்ற அணைகள் எல்லாம் இருக்கின்றன. கடந்த மழைக் காலத்தில், நிறைய புயல், வெள்ளம் வந்தக் காரணத்தினால், அவற்றின் கொள்ளளவு மிகவும் குறைந்து விட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில், என்னைப் பொறுத்தவரையில், தாராளமாகத் தண்ணீர் எடுப்பதற்கு நான் சம்மதம் கொடுத்திருக்கிறேன் ஊர் மக்கள், விவசாயிகள் எல்லோரும் போர்க்கொடி பிடிப்பதற்காக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே, முல்லையாறு என்ற ஒரு ஆறு இருக்கிறது. அது ஜீவநதியாக ஓடி, அதனால் வருடந்தோறும் மழைக் காலங்களில், பல உடைப்புகள் வந்து, மிகவும் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த முல்லை ஆற்றின் குறுக்கே ஒரு சிறு அணை, பள்ளிக்கூட்டம் என்னும் ஒரு அணையைக் கட்டிவிட்டால், பேச்சிப்பாறையிலிருந்து குடிநீர் எடுத்து தாராளமாக வழங்கலாம். அந்த முல்லையாற்றின் குறுக்கே பள்ளிக்கூட்டம் அணையைக் கட்டி, அந்த அணையிலிருந்து தண்ணீரைக் கொடுத்து, விவசாய மக்களின் நீண்டநாள் கோரிக்கைகளை நிறைவேற்றி, பெருஞ்சாணி, பேச்சிப்பாறை அணைகளிலே 'சில்ட்' நிறைந்திருக்கிறது ; அதை எடுத்து விட்டாலும், அங்கே கொள்ளளவு கூடுதலாக இருக்கும்; அதற்கு வேண்டிய ஏற்பாட்டையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து, அங்குள்ள மக்களுக்கு உதவுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது, இரண்டு பிரச்சினைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, நாகர்கோயில் நகர மக்களுக்குக்குடி நீர் வழங்க வேண்டும்; மற்றொன்று, அதேசமயத்தில், அந்தப் பேச்சிப்பாறை அணையிலிருந்து குடிநீர் எடுக்கிறபோது, அங்கே

இருக்கிற விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, முல்லையாறு குறுக்கே அணைக் கட்டி, அந்த அணையின் வாயிலாகக் குடிநீர் வழங்கலாம் என்ற யோசனையையும் தெரிவித்திருக்கிறார்கள். ஒன்றைமட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு பேச்சிப்பாறை அணையிலிருந்து, நாகர்கோயில் மக்களுக்குக் குடிநீர் எடுக்கிற போது, எந்தவித பாதிப்பும் அங்கிருக்கிற விவசாயிகளுக்கு ஏற்படப் போவதில்லை. ஏதோ ஒரு மாயையின் அடிப்படை யிலே அல்ல, நல்ல நோக்கத்தோடுதான் அந்தத் திட்டத்தைப் போட்டிருக்கிறோம். எந்த ஒரு திட்டம் போட்டாலும், இன் றைக்கு வீராணம் திட்டம் போட்டிருக்கிறோம், அந்தப் பகுதி யிலே இருக்கிற விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லாத வகையிலே தான், ஏரிகளை ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்தி இன்றைக்கு அந்தத் திட்டத்தைப் போட்டிருக்கிறோம் அந்த அடிப்படையிலேதான், ஒரு தொலைநோக்குப் பார்வையோடு ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம். அப்படி உண்மை யிலேயே பாதிப்பு ஏற்படுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களேயானால், மீண்டும் அதை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, பாதிப்பு இல்லாதவகையிலே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும். அதே சமயத்தில் இன்றைக்கு முல்லையாறு நதிநீரின் குறுக்கே அணையைக் கட்ட வேண்டுமென்று சொன்னால், எவ்வளவோ பிரச்சினைகள் இருக் கின்றன. அதற்கு 'டெக்னிகல் சாங்ஷன்' பெற வேண்டும். அந்தத் திட்டத்தைத் தீட்ட வேண்டும். அணையைக் கட்டி, அதற்குப் பிறகு குடிநீர் வழங்குவது என்ற இரண்டுத் திட்டத்தை யும் ஒன்றாக உருவாக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதை யெல்லாம் கருத்திலே கொண்டு, நாகர்கோயில் நகர மக்களுக்கு நிரந்தரமாக ஒரு தீர்வு ஏற்படுத்துவதற்கு, இதயதெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களுடைய ஆணையின் பேரிலே, நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

(ஆ) கோவை மாவட்டம் பேரூர் நாகராஜபுரத்தில் தாட்கோ வீடுகள் இடியும் நிலையிலுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கே. பி. ராஜு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, நாக ராஜபுரத்தில் தாட்கோ மூலமாக கட்டப்பட்டுள்ள வீடுகள்